**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No. 174/2019 |
| Preliminary register | |
| Sessions | |
| Deposition Of Witness for | Prosecution PW 4<br>Defense<br>Court |
| Name | திரு. வெங்கடாசலம் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

*எதிரிகள் ஆஜர்.*

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of July 2026.

நான் தற்போது ஏர்வாடி காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்து புலன்விசாரணை செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் ஜமால் என்பவருடன் பணிபுரிந்துள்ளேன். அவரது கையெழுத்து எனக்கு நன்கு தெரியும். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 30.08.2015 ஆம் தேதி 20.30 மணிக்கு எஸ்.எஸ்.ஐ ஜமால் நிலையபொறுப்பில் இருந்த போது வாதி தமிழ்மணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைகேற்ப குற்ற எண். 132/2015 இதச பிரிவுகள் 147, 294(பி), 323, 324, 427, 506(2) என்ற வழக்கை பதிவு செய்துள்ளார். அந்த புகார் மனு **அ.சா.ஆ.2** ஆகும். முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும்.

புகார் மனுவை அசல் தகவலறிக்கையுடன் இணைத்து கனம் நான்குநேரி நீதிமன்றம் அனுப்பியும் சம்மந்தப்பட்ட நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், விசாரணை நகலை அவரே எடுத்துகொண்டு

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.22 17:49:37 +0530

அன்றைய தினம் 21.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறங்களையும் சாட்சிகள் இசக்கிவேல், துரைமுத்து ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.4** ஆகும். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5** ஆகும்.

சாட்சிகள் தமிழ்மணி, செந்தில், லால்பகதுார், பெருமாள், சுந்தர், மாணிக்கம் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளார்.

இவ்வழக்கின் எதிரிகளை தேடிவந்தநிலையில் எதிரிகள் அனைவரும் முன்பிணை பெற்றிருந்ததால் எதிரிகளை கைது செய்யவில்லை.

புகார் மனுவின் அடிப்படையில் புலன் விசாரணையிலும் எதிரிகள் தங்கவேல், முருகன் என்ற மனோகரன், முருகன் என்ற கடிமுருகன், கணேசன் ஆகிய நால்வர் மீதும் குற்றபுரிந்தது உண்மை என தெரியவந்ததால் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 294(பி), 323, 324, 427, 506(2) லிருந்து இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 427, 506(2) ஆக பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாற்ற அறிக்கையை 30.08.2015ம் தேதி தாக்கல் செய்துள்ளார். மேற்படி சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.6** ஆகும்.

வழக்கில் காயம்பட்ட தமிழ்மணி மற்றும் செந்தில் ஆகியோர்களுக்கு காயச்சான்றிதழ் வழங்கிய அரசு மருத்துவர் மருத்துவர் வரதராஜன் அவர்களை 04.09.2015ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மருத்துவர் வாதிக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்றுகள் வழங்கியுள்ளார். அவர் அளித்த காயச்சான்றிதழ்கள் முறையே **அ.சா.ஆ.7** மற்றும் **அ.சா.ஆ.8** ஆகும்.

பின்பு 04.09.2015ம் தேதி மேற்படி நான்கு எதிரிகள் மீது நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. புகார்தாரரிடம் எழுதாத வெள்ளைதாளில்

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.22 17:49:44 +0530

கையெழுத்து வாங்கிக்கொண்டு புகார் என்னால் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. சொன்ன நாள், இடம், விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கை சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது வழக்கு தாக்கல் செய்து குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

BOOMINATHAN
Digitally signed by BOOMINATHAN
Date: 2026.07.22 17:49:48 +0530

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No.174/2019 |
| Preliminary register | |
| Sessions | |
| | Prosecution PW 3 |
| Deposition Of Witness for | Defense |
| | Court |
| Name | திரு. துரைமுத்து |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of July 2026.

நான் கோசல்ராம்நகரில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். சாட்சி இசக்கிவேல் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது இல்லை. நான் கையெழுத்து போடும் பழக்கம் கிடையாது. கைரேகை செய்யும் வழக்கம்தான் உள்ளது. வழக்கு பற்றி எந்த விபரமும் தெரியாது. வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

30.08.2015 ஆம் தேதி இரவு 09.30 மணிக்கு சம்பவ இடமான கோசல்ராம் நகர் தெற்கு தெருவில் சுந்தர் என்பவர் வீட்டிற்கு முன்பு உள்ள ரோட்டையும் மற்றும் அதன் சுற்றுபுறங்களையும் ஏர்வாடி காவல் உதவி ஆய்வாளர் என் முன்னிலையிலும், சாட்சி இசக்கிவேல் என்பவர் முன்னிலையிலும் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்த போது உடன் இருந்து நாங்கள் சாட்சிகளாக கையெழுத்து

BOOMINATHAN
Digitally signed by BOOMINATHAN
Date: 2026.07.22 17:50:02 +0530

செய்துவிட்டு தற்சமயம் உண்மைக்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

BOOMINATHAN

Digitally signed by BOOMINATHAN
Date: 2026.07.22 17:50:07 +0530

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No.174/2019 |
| Preliminary register | |
| Sessions | |
| | Prosecution PW 2 |
| Deposition Of Witness for | Defense |
| | Court |
| Name | திரு. செந்தில் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of July 2026.

நான் திருவரங்கனேரில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 யை தெரியும். அனைவரும் எனது உறவினர்கள். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் ஆண்டு, தேதி, மாதம், நேரம் ஞாபகமில்லை கோசல்ராம்நகரில் உறவினர் ஒருவரின் இறப்பு சடங்கில் கலந்துகொள்ள சென்றபோது அங்கு கும்பலாக சிலர் குடித்துவிட்டு ஆடிக்கொண்டு இருந்தார்கள். அதில் சிலர் என் மீதும் அ.சா.1 ம் மீதும் மோதியதில் அ.சா.1 கீழே விழுந்ததில் அவருக்கு முதுகிலும், உடம்பிலும் காயம் ஏற்பட்டது. அதுபோல எனக்கும் காதில் காயம் ஏற்பட்டது. ஆஜர் எதிரிகள் என்னையும், அ.சா.1 யையும் தாக்கவில்லை. ஆபாசமாகவும், அசிங்கமாகவும் பேசவில்லை, கொலைமிரட்டல் விடுக்கவில்லை. போலீஸார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.22 17:50:13 +0530

எதிரிகளுடன் சமாதானமாக செல்வதாக மனுதாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த மனு கனம் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடந்த 30.08.2015 ஆம் தேதி நண்பகல் 02.00 மணியளவில் கோசல்ராம் நகர் சுந்தர் என்பவரின் அம்மாவின் இறப்பு சடங்கில் கலந்துகொள்ள சென்றபோது 1வது எதிரி அ.சா.1 யை பார்த்து உங்கள் ஊர் கோவில் கொடைக்கு ரேடியோ செட் அடித்த பாக்கி பணத்தை தராத நீ எங்கள் ஊர் இறப்பிற்கு எப்படி வரலாம் என கேட்டு, ஆபாசமாகவும், அசிங்கமாகவும் பேசி, அ.சா.1 யை கையால் முதுகிலும், உடம்பிலும் அடித்து காயம் ஏற்படுத்தினார்கள் என்றும், 3ம் எதிரி முருகன் என்னை காதில் அடித்து காயம் ஏற்படுத்தினார் என்றும், எல்லா எதிரிகளும் கையில் கல்லைக்கொண்டு அ.சா.1 யை பார்த்து கொலைமிரட்டல் செய்தார்கள் என்றும், இதுதொடர்பாக அ.சா.1 காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தார் என்றும் போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் என்னுடைய உறவினர்கள் என்பதற்காக அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டி நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

BOOMINATHAN

Digitally signed by BOOMINATHAN
Date: 2026.07.22 17:50:22 +0530

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No.174/2019 |
| Preliminary register | |
| Sessions | |
| | Prosecution PW 1 |
| Deposition Of Witness for | Defense |
| | Court |
| Name | திரு. தமிழ்மணி |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of July 2026.

நான் கட்டளையில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். என்னுடைய உறவனர்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெப்பம் என்னுடையது தான் அது **அ.சா.ஆ.1** ஆகும். அந்த புகார் மனுவில் என்ன எழுதியுள்ளது என எனக்கு தெரியாது. சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் ஆண்டு, தேதி, மாதம் ஞாபகமில்லை நண்பகல் சுமார் 02.00 மணிக்கு கோசல்ராம்நகரில் உறவினர் ஒருவரின் இறப்பு சடங்கில் கலந்துகொள்ள சென்றபோது அங்கு கும்பலாக சிலர் குடித்துவிட்டு ஆடிக்கொண்டு இருந்தார்கள். அதில் சிலர் என் மீது மோதியதில் நான் கீழே விழுந்ததில் முதுகிலும், உடம்பிலும் வலி ஏற்பட்டது. அதுபோல என்னுடன் வந்த செந்தில் என்பவருக்கும் காதில் காயம் ஏற்பட்டது. ஆஜர் எதிரிகள் என்னையும், செந்திலையும் தாக்கவில்லை. ஆபாசமாகவும், அசிங்கமாகவும் பேசவில்லை, கொலைமிரட்டல் விடுக்கவில்லை. போலீஸார் ஒரு வெள்ளை தாளில் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான்

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.22 17:50:31 +0530

கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். போலீஸார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

எதிரிகளுடன் சமாதானமாக செல்வதாக மனுதாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த மனு கனம் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடந்த 30.08.2015 ஆம் தேதி நண்பகல் 02.00 மணியளவில் கோசல்ராம் நகர் சுந்தர் என்பவரின் அம்மாவின் இறப்பு சடங்கில் கலந்துகொள்ள சென்றபோது 1வது எதிரி என்னை பார்த்து உங்கள் ஊர் கோவில் கொடைக்கு ரேடியோ செட் அடித்த பாக்கி பணத்தை தராத நீ எங்கள் ஊர் இறப்பிற்கு எப்படி வரலாம் என கேட்டு, ஆபாசமாகவும், அசிங்கமாகவும் பேசி, என்னை கையால் முதுகிலும், உடம்பிலும் அடித்து காயம் ஏற்படுத்தினார்கள் என்றும், 3ம் எதிரி முருகன் என்னுடன் வந்த செந்திலை காதில் அடித்து காயம் ஏற்படுத்தினார் என்றும், எல்லா எதிரிகளும் கையில் கல்லைக்கொண்டு என்னை கொலைமிரட்டல் செய்தார்கள் என்றும், காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்து அதன்படி போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் என்னுடைய உறவினர்கள் என்பதற்காக அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டி நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.22 17:50:35 +0530